மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பதில் கிடைத்தவுடன் நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. மி. வின்சென்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, பையனீர் குடும்பத்தாரிடமிருந்து உயர்நீதிமன்றத் தீர்ப்பின்படி வனத்துறை பெற்றுள்ள நிலத்தில் வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் அமைக்க வேளாண்மைப் பல்கலைக் கழகம் முயற்சி எடுத்துள்ளது என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: முயற்சி எடுத்தது என்பது உண்மை. ஆனால் பயனீர் பண்ணையினர் 1971 ஆம் ஆண்டிலேயே அது சம்பந்தமாக விவரங்களை உச்ச நீதிமன்றத்திற்குக் கொண்டு சென்று விட்டார்கள். அது இன்னும் உச்ச நீதிமன்றத்திலேயே முடிவு செய்யப்படாமலிருக்கிறது. ஆகவேதான் வேறு நிலத்தைக் கேட்கிறோம்.

விரிஞ்சிபுரத்திலுள்ள வாழைப் பண்ணை

*வினா எண். 128—திரு. இலா. பலராமன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு விரிஞ்சிபுரம் வாழைப் பண்ணை அரசு ஏற்படுத்தியதா?

(ஆ) இதன் நோக்கம்?

(இ) இதனால் கன்றுகளை வாங்கிப் பயன் அடைந்த விவசாயிகள் எவ்வளவு பேர்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) ஆம்.

(ஆ) வாழை ரகங்களின் உற்பத்தித்திறனைப் பெருக்கவும் நோய்ப் பூச்சிகளைக் கட்டுப்படுத்திடவும் ஆய்வுகள் மேற்கொள்ளவும் இப்பண்ணை ஏற்படுத்தப்பட்டது.

(இ) சுமார் ஒன்பதாயிரம் விவசாயிகள்.

திரு. என். வாதராஜன்: தலைவர் அவர்களே, புகழ்பெற்ற சிறுமலை வாழை போன்றவைகள் எல்லாம் முடிக்கொத்து நோயினால் பாதிக்கப்படுகிற இக்காலத்தில் இந்த வாழைக்கு மாற்று வாழைகள் கண்டு பிடிக்கக்கூடிய ஆராய்ச்சி இந்தப் பண்ணையில் நடைபெறுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, மாற்று வாழை கண்டு பிடிக்கின்ற முயற்சி இல்லை. இங்கே பயிரிடக்கூடிய பச்சை வாழை ரகங்களினுடைய உற்பத்தியைப் பெருக்குகின்ற வகையிலேயும் பச்சைவாழையினுடைய தரத்தை ஏற்றுமதிக்குத் தகுந்தவாறு உயர்த்துகின்ற வகையிலும் இங்கே ஆராய்ச்சி செய்யப்படுகிறது.

1981 ஆகஸ்ட் 29]

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, வாழையிலே எத்தனை வகை இருக்கின்றது? அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய அளவுக்குப் பயன் தரக்கூடியது எந்த வகை? அதிலே, சோகை, வாடை நோய் சில வாழைகளைத் தாக்குகிறது. அதை நிவர்த்தி செய்ய ஏதாவது ஆராய்ச்சி செய்யப்படுகிறதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இது விரிஞ்சிபுரம் பண்ணையைப் பற்றிய கேள்வி. தனிக் கேள்வி போட்டால், விவரமாகப் பதில் சொல்லலாம்.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வாழை ஆராய்ச்சி விரிஞ்சிபுரம் அல்லாமல் வேறு ஏதாவது இடத்தில் அமைக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குத் தொடர்பில்லை.

திரு. ஏ. சி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம் விரிஞ்சிபுரம் வாழைப் பண்ணை எப்பொழுது துவங்கப்பட்டது? எவ்வளவு ஏக்கர் பரப்பளவிலே பயிர் செய்யப்படுகிறது? எவ்வளவு வாழை உற்பத்தியாகிறது என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: 1970 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15 ஏக்கர் பரப்பளவிலே இது துவங்கப்பட்டது. டிசம்பர் மாதம் முதல் இந்தப் பண்ணை வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு மாற்றப்பட்டு, வாழை சம்பந்தமான ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன.

தமிழகத்தில் வறட்சி காரணமாக ஏற்பட்டுள்ள விதைகள் தட்டுப்பாடு.

*வினா எண் 129—திரு. எம். எஸ். மாணிக்கம், திரு. த. வீராசாமி, திரு. நன்னிலம் அ. கலையரசன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் வறட்சி ஏற்பட்டதின் காரணமாக வேர்க்கடலை போன்ற விதைகள் விவசாயிகளுக்குக் கிடைக்காமல் போவதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விநியோகிக்க நிலக்கடலை மற்றும் நெல் கொள்முதலுக்காக அரசு முதலில் ரூ. 62 இலட்சமும், பிறகு ரூ. 50 இலட்சமும் செலவு செய்ய அனுமதி அளித்துள்ளது.

TRUTH ALONE TRIUMPHS